திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பிலே இருந்தபோது 73, 74—ஆம் ஆண்டுகளில், 16 ஆண்டுகளுக்கு முன்பு காடம்பாறை மின் உற்பத்தித் திட்டம் ஆசிய கண்டத்திலேயே விஞ்ஞான நுட்பம் வாய்ந்த ஒரு புதுமையான திட்டமாகவும், குறைந்த செலவில் அதிக மின் உற்பத்தி செய்யும் நூதனமான திட்டமாகவும் இது தொடங்கப் பட்ட திட்டம். ஆகவே, இது முழுமையாக உற்பத்தித் திறனைத் தருவதற்கு எவ்வளவு காலம் இன்னும் ஆகும் என்பதையும், இவ்வளவு காலதாமதம் ஏற்படுவதற்கு என்ன காரணம் என்பதையும் அமைச்சரிடமிருந்து நான் அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் முடிவுற்று மின்சாரத்தை இப்போது உற்பத்தி செய்துகொண்டிருக்கிறது. இந்தத் திட்டம் 89 முடிய 123.356 மில்லியன் யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்திருக்கிறது.

திரு. மு. இராமநாதன் : பேரவைத் தலைவரவர்களே, இந்தக் காடம்பாறை மின் உற்பத்தி திட்டத்தின் ஆரம்ப கால மதிப்பு எவ்வளவு என்பதையும், காலந் தாழ்வின் காரணமாக ஏற்பட்ட கூடுதல் செலவு எவ்வளவு என்பதையும், பல முறை பணி நின்று போன காரணத்தால் ஏற்பட்ட நட்டம் எவ்வளவு என்பதையும் பொருட்கள் களவு போன காரணத்தால் மின் வாரியத்திற்கு ஏற்பட்ட நட்டம் எவ்வளவு என்பதையும் அமைச்சரவர்கள் அறிவிப்பாரா? அந்த விவரங்களை இந்த அவைக்குத் தெரிவிக்க வாய்ப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நாளைக்கு இதுபற்றிப் பேசுவாரா? நான் அப்போது நான் நிறைய விஷயங்களைச் சேகரித்து அவருக்குச் சொல்ல இயலும். இருந்தாலும் ரூ. 163 கோடி திட்ட மதிப்பீட்டில் இந்தத் திட்டம் அமைக்கப்பட்டது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மின் விநியோகம் முறைப்படுத்துதல்.

*8222 திரு. வி. தம்புசாமி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவாரூரில் உள்ள மின் நிலைய எல்லைக்குட்பட்ட மின் மாற்றிகள் பழமையானவையாகவும், தேவைக்கு குறைவாகவும் இருப்பதால், மின் விநியோகம் முறைப்படுத்த இயலாமல் மின் விளக்குகள் பாதிக்கப்படுவதை சீர் செய்யும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

1990 மே 10]

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம். திருவாரூர் 66/11 கி.வோ.ஆ. துணை மின் நிலையத்தில் உள்ள குறைந்த திறன் கொண்ட மின் மாற்றிகளை அதிக திறன் கொண்ட மின் மாற்றிகளாக மாற்றியமைக்கும் திட்டம் இருக்கிறது.

(ஆ) தற்போது திருவாரூரில் உள்ள 3X2.5 மெ.வோ.ஆ. (7.5 மெ.வோ.ஆ) மின் மாற்றிகள் (12.5 மெ.வோ.) திறன் கொண்டவைகளாக மாற்றப்பட உள்ளது. இதற்குத் தேவையான ஒதுக்கீடு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு பணிகள் விரைவில் செய்து முடிக்கப்பட உள்ளன.

9–50 மணி

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது சொன்னார்கள், திருவாரூரில் இருக்கக் கூடிய துணை மின் நிலையத் திட்டம் பரிசீலிக்கப்பட்டு அதை விஸ்தரிப்பதற்கான முறையில் புதிய மின் மாற்றிகளை அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. 3.25 இருப்பதை 12.5 ஆக மாற்றுவதற்கான முயற்சிகள் நடப்பதாகச் சொன்னார்கள். அதற்கான நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டு இருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். விரைவில் திட்டம் முடிக்கப்படும் என்று சொன்னார்கள். நான் தெரிந்துக்கொள்ள விரும்புவது இந்தத் திட்டம் எப்போது துவக்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இதற்கான நிதி ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அடுத்து பணிகள் மேற்கொள்ளப்படும். எனவே விரைவில் திட்டம் முடிக்கப்படும்.

அரசு தலைமை மின் ஆய்வாளர் அலுவலகம்.

*9797 திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் :
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சைதை தொகுதி, கிண்டி திரு. வி. க. தொழிற்பேட்டையில் அரசு தலைமை மின் ஆய்வாளர் அலுவலகம் கட்டப்பட்டு வருகின்றதா?

(ஆ) ஆம் எனில், கட்டுமானப் பணி எப்போது முடியும்?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இன்னும் இரண்டு திங்களில் முடிவடையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.